வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | தொடர்பாடலும் ஊடககற்கையும் I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

01. "இருவரோ இருவருக்கு மேற்பட்டவரோ ஒரு செய்தியில் பொதுமைக் கருத்தை பகிர்ந்து கொள்ளும் முறையில் எண்ணங்களையோ, உணர்வுகளையோ பரிமாறிக் கொள்ளும் தன்மையை தொடர்பாடல் செயன்முறை" என வரவிலக்கணப்படுத்தியவர்?
   1) புருக்கர் 2) எட்வேட் சபீர் 3) லீகன் 4) சோ.எஸ்.டெயினர் 5) எச்.இ.கல்வி

02. தொடர்பாடல் செயன்முறை மாதிரிகளில் "பாரம்பரிய மாதிரி" என சிறப்பாக குறிப்பிடப்படும் மாதிரி
   1) அரிஸ்ரோட்டில் 2) வில்பர் ஷ்ராம் 3) ஹரோல்.டி.லாஸ்வெல்
   4) ஷெனோன் வீவர் மாதிரி 5) பெர்லோ மாதிரி

03. "வெகுசன ஊடகச் செய்தி அறிக்கையிடல்கள் முரண்பாட்டு நிலமைகளை தோற்றுவிக்கின்றன" இதனடிப்படையில் செய்தி ஒன்றின் செம்மை மற்றும் துல்லியம் தீர்மானிக்கப்படுவது
   1) செய்தி நிருபரின் விவேகத்தில்
   2) செய்தி தெரிவு செய்கின்ற ஆசிரியரின் திறமையில்
   3) செய்தி நிருபர் ஒருவரின் எழுத்தாற்றலில்
   4) செய்தி ஆசிரியரின் விவேகத்தில்
   5) செய்தி நிருபர் தெரிவு செய்கின்ற தகவல் மூலாதாரங்களில்

04. செய்திப் பத்திரிகை ஒன்றில் மொழியின் பயன்பாடு குறித்த இயல்புகளில் பொருத்தமற்றதாக அமைவது
   1) மரபு சார்ந்த முறைகளிலிருந்து வேறுபட்டிருத்தல்
   2) உயர்ந்த மொழிவடிவத்தில் எழுதப்பட்டிருத்தல்
   3) எளிமையான மொழி வடிவத்தில் எழுதப்பட்டிருத்தல்
   4) எழுதும் பாணிகளுக்கு ஏற்ற விதத்தில் மொழியின் வடிவத்தை மாற்றிக் கொள்ள முடியும்
   5) இலக்குக் குழுக்களுக்குப் பொருத்தமான வகையில் எழுதப்பட்டிருத்தல்

05. பல்வேறு தொடர்பாடல் சந்தர்ப்பங்களில் பின்னூட்டல் இடம்பெறும் அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பாக வெகுசன ஊடகத்தில் பின்னூட்டல் நிகழ்வது
   1) அதிகளவில் எல்லைப்படுத்தப்பட்ட பொதுவாகத் தாமதமான வடிவத்தில்
   2) பெரும்பாலும் உடனடியான வடிவத்தில்
   3) எல்லைக்குட்படுத்தப்பட்ட உடனடியான வடிவத்தில்
   4) அதிகளவில் பொதுவாக உடனடியான வடிவத்தில்
   5) எல்லைக்குட்படுத்தப்பட்ட தாமதமான வடிவத்தில்

06. “மக்கள் ஊடக தொடர்பியலில் பொறுப்புணர்வு” எனும் நூலில் செய்தி தொடர்பு சாதனங்களினை பொறுப்புடன் நடாத்தும் கருவிகளாக அரசாங்கம், செய்தித்தாள்கள், பொதுமக்கள் என்பன கூறப்படுகின்றது. இந் நூலுக்குரிய ஆசிரியர்கள் முறையே

1) ஜோன்லொக், ஜோன் மில்ரன்
2) வில்லியம் ரிவர்ஸ், வில்வர் ஷராம்
4) ஜோன் மில்ரன், ஸ்ருவட்மில்
4) ஸ்ருவர்மில், வில்வர் ஸ்ராம்
5) தோமஸ் ஜெபர்சன், டெக்கார்டே

07. கூட்டுறவு சங்கத்தின் அடிப்படையில் கிராம மக்களின் பங்களிப்புடன் கூட்டுறவு முறையின் ஊடாக பொருளாதார செயன்முறையை முன்னெடுக்கின்ற திட்டமிடலின் ஓர் இயந்திரமாகக் காணப்படுவது

1) சர்வோதய இயக்கம்
2) சணச இயக்கம்
3) பிரதேச சபை அபிவிருத்தி இயக்கம்
4) இலங்கை சமுர்த்தி அதிகார சபை
5) கிராமோதய சபை இயக்கம்

08. முரண்பாட்டு முகாமைத்துவ மாதிரியில் தலையீட்டாளரின் வகிபங்குடன் பொருந்தாத கூற்றை தெரிவு செய்க.

1) பக்கசார்பற்றவராக செயற்படுதல்
2) இருதரப்பினருக்கும் உதவுபவராக காணப்படுதல்
3) போலியான தகவல்களுடன் கூடிய சூழலை உருவாக்க இயலாதவர்
4) இரு சாராருடனும் வேறு வேறாக கலந்துரையாடல்
5) முரண்பாட்டு முகாமைத்துவத்திற்கான சூழலை உருவாக்கிக் கொடுத்தல்

09. வீதியில் மின்தாக்கிய விபத்து பற்றி ஒரு சில நிமிடங்களில் அவ்வீதியில் சென்ற ஒருவரால் செல்லிடத் தொலைபேசியின் மூலம் அது பற்றிய தகவல்களை தொலைக்காட்சி நிலையத்திற்கு அறிக்கையிடப்பட்டது. இவ் அறிக்கையிடல் நன்றாக விபரிப்பது.

1) மக்களிடைத் தொடர்பாடல் மூலம்
2) பேரிடத் தொடர்பாடல் மூலம்
3) தொடராறா (Online journalism) பத்திரிகைத் தொழிலின் மூலம்
4) பிரஜை வெகுஜன ஊடகவியல் மூலம்
5) ரப்லோயிட்டு (Tabloid Journalism) பத்திரிகை மூலம்

10. மாற்று வெகுஜன ஊடகத்தின் பண்புகள் தொடர்பில் வகுப்பறைக் கலந்துரையாடல் ஒன்றில் முன்வைக்கப்பட்ட சில கருத்துக்கள் தரப்பட்டுள்ளன

A – பிரதான வெகுஜன ஊடகங்களுக்கு சவாலாக அமையலாம்
B – புதிய சிந்தனையை பிரபல்யப்படுத்துதல்
C – துவாரபாலகர்கள் பலர் இருத்தல் சாதாரண நிலமையாகும்
D – குறைந்த வசதிகளுடன் இயங்குதல்
E – கொள்கை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது

மேற்குறித்தவற்றில் மாற்று ஊடகம் தொடர்பான சரியான கூற்றுக்கள்.

1) A B D E மட்டும்
2) A C மட்டும்
3) B D E மட்டும்
4) A E C மட்டும்
5) AB C D E எல்லாம் சரி

11. மக்கள் தொடர்பு திட்டமிடலில் கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?

A – திட்டமிடல் கூட்டாக இடம்பெறுதல் வேண்டும்

B – திட்டத்தை மாற்றியமைக்க அவகாசம் இருத்தல் வேண்டும்

C – போட்டி அமைப்புக்களின் நிலையை ஆராய்தல்

D – திட்டத்திற்கான வரவு செலவுத்திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமில்லை

E – திட்டம் தொடர்பில் திட்டமுடன் தொடர்புடையவர் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

மேற்குறித்தவற்றில் சரியானவை

1) A C D E மட்டும் 2) A B E மட்டும் 3) A, B, C, E மட்டும்
4) A E C மட்டும் 5) A B C D E எல்லாம்

12. வெகுஜன ஊடகங்களின் சமூகப் பொறுப்புணர்வுக் கோட்பாடு (Social Responsibility Theory) பற்றிய தகவல்களில்

A – ஊடகச் செயன்முறையில் அரசின் தலையீட்டை இழிவளவாக்குகின்றது

B – பல்வேறு பிரதிநிதித்துவங்களுக்கான வெளியை வழங்குகின்றது

C – தேவைப்படும் போது அரசின் விதிமுறைகளை எதிர்பார்க்கின்றது

D – இலாபம் ஈட்டும் குறிக்கோள் மற்றும் போட்டித் தன்மையை இழிவாக்குகின்றது

மிகப் பொருத்தமானவற்றை வெளிப்படுத்திக்காட்டும் தொகுதி

1) A, B ஆகியன மட்டும் 2) A, C ஆகியன மட்டும் 3) A, B, C ஆகியன மட்டும்
4) A, B, C, D ஆகியன எல்லாம் 5) B, C, D ஆகியன எல்லாம்

13. அபிவிருத்தி செய்தியொன்றில் உள்ளடக்கப்படாத ஒரு விடயம்

1) நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்திச் செய்தியொன்றை இணைத்துக் கொள்ளல்
2) சமூக சந்தைப்படுத்தல் செய்தியின் தன்மை
3) தெரிவு செய்யப்பட்ட ஓர் இலக்கு
4) ஒரு வணிக நோக்கம்
5) நிச்சயிக்கப்பட்ட ஓர் இலக்குப் பெறுநர் குழு

14. உயிர்வாழும் மொழிகளில் பின்வரும் எந்த மொழிக் கூட்டங்கள் உள்ளடங்காது

1) பாளி – சமஸ்கிருதம் – இலத்தீன்
2) இத்தாலியன் – ருஷியன் – தமிழ்
3) தமிழ் – பாளி – இலத்தீன்
4) சிங்களம் – ஆங்கிலம் – சமஸ்கிருதம்
5) பிரெஞ்சு – ஹிந்தி – ஸ்பானிஷ்

15. ஒரு குறித்த திரைப்படம் அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சி உயரிய தொடர் படங்களைக் கொண்டிருப்பதாக முடிவு செய்யப்படுவதற்குக் காரணம்

1) பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்டிருக்கின்றமை
2) கட்புல மொழி நன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றமை
3) ஏனைய கட்புல ஆக்கங்களுடன் ஒப்பிடப்படுகின்றமை
4) படங்கள் அறநெறிப் பெறுமானத்தைக் கொண்டிருக்கின்றமை
5) வரலாற்றுத் தகவல்களையும் அரசியல் தகவல்களையும் அடக்கியிருக்கின்றமை

16. மின்னூடகங்களுடன் ஒப்பிடும் போது அச்சு ஊடகத்தில் உள்ள சில வலிமைகள்
   1) கணநிலையானது, கையாள்வதன் வசதி, விவரணவியல்பைக் கொண்டிருத்தல்
   2) விலை குறைவாக இருக்கின்றமை, சுருக்கமானது, காப்புவசதி இருத்தல்
   3) காப்பு, கையாள்வதன் வசதி, விபரணவியல்பைக் கொண்டிருத்தல்
   4) விவரணவியல்பு, காப்பு, கணநிலையானதாக இருத்தல்
   5) சுருக்கமானது, காப்பு, கையாள்வதன் வசதி இருத்தல்

17. ஊடகத்தைக் கையாளும் போது பகுத்தறிவுச் சிந்தனை தேவைப்படுவது
   1) அறிக்கையைச் சரியாக வாசிப்பதற்கு
   2) செய்தியை சாதூரியமாகப் புரிந்து கொள்வதற்கு
   3) சிறப்பம்சங்களை இனங்காண்பதற்கு
   4) சினிமாவை விமர்சிப்பதற்கு
   5) கண்டுபிடிக்கும் ஆற்றல் உள்ள படைப்பாளியாவதற்கு

18. நிலவும் கலாசாரத்தில் மதிக்கப்படும் அம்சங்கள் வெளிக்கலாச்சாரத்தால் தாழ்வுபடுத்தப்படும் போது சமூகத்தில் ஏற்படும் உணர்வு எவ்வாறு அழைக்கப்படும்
   1) கலாச்சார ஆக்கிரமிப்பு  2) கலாச்சார திணிப்பு  3) கலாச்சார பரிமாற்றம்
   4) கலாச்சார அதிர்வு  5) எதிர்க் கலாசாரம்

19. "கலாசாரம் என்பது அங்கத்தவர்களின் வாழ்க்கை முறைக்கு அதாவது அவர்களால் கற்கப்பட்டதும், சேகரிக்கப்பட்டதும் பங்கிட்டுக் கொண்டு பரம்பரை பரம்பரையாக கொண்டு மெல்லும் கருத்துக்களும் பழக்கவழக்கங்களாகும்" என வரவிலக்கணப்படுத்தியவர்
   1) பர்கி  2) மலினோவுஸ்க்கி  3) ரல்ப்லிண்டன்
   4) எட்வேட் டய்லர்  5) எட்வேட் M. ரொஜர்ஸ்


20. சமூக இசைவாக்கச் செயன்முறையின் இனங்காணுதலுக்குத் தொடர்புள்ள சில எண்ணக்கருக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A – வகிபாகம் ஏற்றல்
   B – பின்பற்றுதல்
   C – போலி நடிப்பு
   D – பாத்திரமேற்று நடித்தல்
   E – இனங்காணுதல்
   மேற்குறித்த எண்ணக்கருக்களுக்குள் சமூக இசைவாக்கச் செயன்முறையை இனங்காணுவதற்கு வேண்டிய எண்ணக்கருக்களை தெரிவு செய்க?
   1) A C E  2) C D E  3) A B C D E  4) A B C  5) A C D E

21. நவீன வெகுஜன ஊடகங்களுடனான வேறுபாட்டில் மரபு ரீதியான ஊடகங்களில் அவதானிக்கப்பட முடியாத இயல்பை
   1) உயர்ந்த உந்து சக்தியைக் கொண்டிருப்பது
   2) வடிவத்திற்கும் உள்ளடக்கத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பது
   3) பிராந்திய மொழிகளைக் கொண்டிருப்பது
   4) தனிப்பட்ட உணர்வுகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பது
   5) அமைப்பொழுங்கிலான கட்டமைப்பைக் கொண்டிருப்பது

22. வலுவான சமூகமொன்றில் வாண்மையாளர்களினால் உருவாக்கப்பட்ட கலாசாரமாக இருக்கக்கூடியது

1) வெகுசன கலாசாரம் 2) இனக் கலாசாரம் 3) பல்லின மக்கள் கலாசாரம்
4) மத கலாசாரம் 5) பண்டைய உயர் கலாசாரம்

❖ **23 முதல் 28 வரையான வினாக்களிற்கு விடையளிக்கும் போது கீழ்வரும் மாதிரியைத் தொடர்பாடலின் மாதிரியாக கருத்திற் கொள்க.**




23. மேற்படி வரைபை ஒத்த மாதிரியை அறிமுகப்படுத்தியவர்

1) ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம் 2) டேவிட்.கே.பெர்லோ
3) செனோன் மற்றும் வெவரன் வீவர் 4) லசார்பீலீட் 5) ஹரோல்.டி.லாஸ்வெல்

24. தொடர்பாடற் சந்தர்ப்பமொன்றில் குறிமுறையாக்கம் மற்றும் குறிமுறையவிழ்ப்பு பொதுவாக நிகழ்வதாக எதிர்பார்க்கும் படிநிலைகள்

1) Q,B மற்றும் F R 2) Q B மற்றும் C R 3) E, B மற்றும் F C
4) F R மற்றும் E B 5) A, E மற்றும் F D

25. தொலைபேசி ஊடகம் ஒன்றின் வழியாக குறித்த செய்தியானது Q இனால் கடத்தப்பட்டது எனினும் அச்செய்தி சரிவர புரிந்துகொள்ள முடியவில்லை. இதனை பிரதிநிதித்துவம் செய்வது

1) P 2) R 3) S 4) D 5) T

26. மேற்குறித்த மாதிரியில் P மூலமாக கருதப்பட முடியுமானால் பெறுநரிடத்தில் ஏற்படுத்தப்பட்ட உச்சவிளைவாக கருதப்பட கூடியது

1) Q 2) R 3) S 4) T 5) D

27. மேற்படி மாதிரியின் அடிப்படையில் E, F இற்கு மிகப் பொருத்தமானது

1) தகவல் கடத்தி 2) கடத்தி, அனுப்பட்ட சமிக்ஞை 3) பெறப்பட்ட சமிக்ஞை, தடை
4) அனுப்பப்பட்ட சமிக்ஞை, தடை 5) அனுப்பட்ட சமிக்ஞை, பெற்ற சமிக்ஞை

28. மேற்குறித்த மாதிரியானது வட்டச்சுற்றுப்பாய்ச்சல் மாதிரியாக காணப்படின் அதில் உள்ளடங்கும் அம்சங்களினை முறையே குறிப்பது

1) A, B, C 2) A, E, F 3) B, E, T 4) F, R, D 5) E, F, D

29. கிராமிய அபிவிருத்தித் திட்டத்திற்குரிய செய்திகளைத் தயாரிக்கும் போது பாரம்பரியத்துக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமெனத் தொடர்பாடலியலாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவ்வாறான முடிவுக்கு வருதல் சாத்தியமாக இருப்பது

1) பாரம்பரிய நூல்களின் உரிமைகள் சிக்கல் இல்லாமல் இருப்பதனால்
2) பாரம்பரிய மக்களின் மெய்யறிவுக்கு நெருங்கி இருப்பதனால்
3) பாரம்பரியம் என்பது கிராமிய அடிப்படையுள்ள ஆக்கமாக இருப்பதனால்
4) பாரம்பரியத்திற்கும் அபிவிருத்திக்கும் இடையில் தொடர்பு இருப்பதனால்
5) பாரம்பரியம் ஆக்கபூர்வமான தொடர்பாடற் தந்திரமாக இருப்பதனால்

30. பின்வருவனவற்றுள் பொதுமக்கள் தொடர்பு நோக்கத்தை பிரதிபலிப்பது

1) வெகுசன ஊடகங்களை நன்றாக பயன்படுத்தல்
2) திட்டத்தை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்
3) பல்வேறு தரப்பினரிடம் பொறுப்புக்களைக் கையளித்தல்
4) மக்கள் குழுவிடம் பயனுறுதிமிக்கத் தொடர்புகளை பேணுதல்
5) முறைசார் நிதி முகாமையைப் பேணுதல்.

31. ஆட்களிடைத் தொடர்பாடலில் செவிமடுத்தல் தேர்ச்சி மிக முக்கியம் பெறுகின்றது. ஆசிரியர் கற்றல் செயற்பாட்டில் செவிமடுத்தல் தேர்ச்சி பற்றி சில கருத்தாடல்களை மாணவர்கள் முன்வைத்தார்

A – புலக்காட்சி குறைபாடு செவிமடுத்தலை பலப்படுத்தும்
B – மனவெழுச்சிக்குட்படுதல், செவிமடுத்தல் செயன்முறையை பலவீனமடையச் செய்யும்
C – உயர்மட்ட செவிமடுத்தல் உயர்மட்ட ஞாபகத்திற்கு வழிப்படுத்தும்
D – மனவெழுச்சிகள் செவிமடுத்தல் செயன்முறையை பலமாக்கும்

மேற்படி கருத்துக்களில் உடன்பாடானவை

1) Bயும் Cயும் மாத்திரம் 2) Aயும் Cயும் Dயும் மாத்திரம் 3) Bயும் Dயும் மாத்திரம்
4) Aயும் Dயும் மாத்திரம் 5) Aயும் Bயும் Cயும் Dயும் அனைத்தும்

32. பின்வருவனவற்றுள் ஊடக கலாசார தாக்கமாக அமைய முடியாதது

1) அனைத்து நடத்தைக் கோலங்களும் கட்டியெழுப்பப்படுதல்
2) ஊடக அதிகார பலத்தினூடாக கலாச்சார திணிப்பு இடம் பெறல்
3) சுதேச மற்றும் தனித்துவ கலாசர அடையாளம் விருத்தியடைதல்
4) பூகோளமட்ட கலாசார தெரிவுகளுக்கு மக்கள் தூண்டப்படல்
5) தனித்துவ கலாசார அடையாளங்கள் இழிவு நிலைக்கு செல்லுதல்

33. அபிவிருத்தி பற்றிய நிலையான வரவிலக்கணம் இன்மை
அபிவிருத்தியில் கீழத்தேய சிந்தனைகள், மரபுவழி மற்றும் ஆன்மீகம் செல்வாக்குச் செலுத்துதல்.
அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருக்கள் காலத்திற்கு ஏற்ப மாற்றமடைதல்

மேற்படி அபிவிருத்தி தொடர்பியல் சார்ந்த சவால்கள் பின்வரும் எந்த பிரச்சினையுடன் மிகவும் தொடர்புபட்டமைந்தது

1) கலாசாரம் சார்ந்த பிரச்சினையுடன்
2) அபிவிருத்தியில் பூகோள தாக்கம் சார்ந்த பிரச்சினையுடன்
3) அரசியல் சார்ந்த பிரச்சினையுடன்
4) அபிவிருத்திக்கான தகவல் வீழ்ச்சி சார்ந்த பிரச்சினையுடன்
5) அபிவிருத்தி தத்துவம் சார்ந்த பிரச்சினையுடன்

34. குறித்த தொடர்பாடல் ஒன்றில் செவிமடுத்தலில் ஈடுபடுவரிடம் அவதானிக்கப்படக் கூடிய இயல்பு அல்லாதது

1) பொறுமை  2) கற்பனை  3) அக்கறை  4) அவதானம்  5) புரிந்து கொள்ளல்

35. ஊடகங்கள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளாக கண்காணித்தல், தொடர்புபடுத்தல், பண்பாட்டைக் கடத்துதல் ஆகியவற்றை இனங்காட்டியவர்

1) ஹரோல்.டி.லாஸ்வெல்  2) அரிஸ்ரோட்டில்  3) பர்லோ

4) டெனிஸ் மக்குவெல்  5) ஷெனோன் லீவர்

36. நிறுவன முகாமையின் வெற்றிக்கு பொதுசனத் தொடர்பு முயற்சிகள் இன்றியமையாதது. இதற்கு நிறுவனத்தின் பொதுசனத் தொடர்பு ஊழியரின் வினைத்திறனான இயக்கத்திறன்கள் அடிப்படையாகின்றன. மேற்படி நிறுவனத்தில் பணிபுரிகின்ற ஊழியர்களிடையே பொதுசனத் தொடர்பு அலுவலர் தொடர்பிலான தகமைகள் பற்றிய விமர்சனங்கள் பின்வருமாறு இடம்பெற்று இருந்தன.

A – முகாமைத்துவ செயற்பாட்டுடன் இடைவினைத் தொடர்பை பேணுவதில்லை

B – பொதுசனத்தொடர்பு அலுவலரிடம் பல்வேறுபட்ட ஊடகங்கள் தொடர்பிலான அறிவு காணப்படுகின்றது.

C – பொதுசனத் தொடர்பு அலுவலரிடம் நிதிமூல அறிவின்மை காணப்படுகின்றது.

D – மேற்படி அலுவலரிடம் பிரச்சினையை தீர்க்கும் ஆற்றல் உண்டு

E – எழுத்தாற்றல், திட்டமிடலில் போதாமைகள் நிலவுகின்றன.

மேற்குறித்தவற்றில் பொதுசனத் தொடர்பு ஊழியரிடம் காணப்பட வேண்டிய சாதகமான தகமைகளாக அமைவன.

1) Bயும் Dயும் மட்டும்  2) Aயும் Dயும் மட்டும்  3) Aயும் Cயும் Eயும் மட்டும்

4) Dயும் Eயும் மட்டும்  5) Aயும் Bயும் Eயும் மட்டும்

37. P → Q → R → S → தாக்கம்

மேற்குறிப்பிட்ட மாதிரியில் PQRS முறையே குறிப்பது.

1) யார், யாருக்கு, என்ன விடயம், எந்த ஊடகம்
2) அனுப்புனர், ஊடகம், பெறுநர், தகவல்
3) அனுப்புனர், தகவல், ஊடகம், யாருக்கு
4) யார், என்ன விடயம், எந்த ஊடகம், யாருக்கு
5) தகவல், மூலாதாரம், ஊடுகடத்தி, தடை, பெறுநர்

38. பின்வரும் கூற்றுக்களில் மானுடத் தொடர்பாடலுடன் தொடர்பற்றது எது?

1) வாய்மொழியில்லா தொடர்பாடல் அதிகம் பயன்படுத்தப்படும்
2) ஒரே நேரத்தில் பல்வேறு தொடர்பாடல் வடிவங்கள் பயன்படுத்தப்படும்
3) பண்பாட்டின் ஆளுகைக்கு உட்பட்டது.
4) சூழமைவுக்கு ஏற்ப மாற்றம் கொள்வது
5) நிகழ்காலத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது

The National e-learning Portal for The General Education

39. அபிவிருத்தி செய்தியினுடைய இயல்புகளில் உள்ளடங்காதது

1) உறுதித்தன்மை வாய்ந்ததவையாகக் காணப்படுதல்

2) அபிவிருத்தி செய்தி சாதாரண விளம்பரங்களை போன்று காணப்படல்

3) பல்வேறு ஊடக கலப்பினால் முன்வைக்கப்படும்

4) அபிவிருத்தி முயற்சியில் பிரதியை பிரஜைகளிடம் முன்வைத்தல்

5) பிரஜைகளின் பங்குபற்றலுடன் நடைமுறைப்படுத்தப்படும்

40. வெகுசன ஊடக நிறுவனம் தனது கொள்கையை கட்டியெழுப்புவது முக்கியமாவது?

1) கிரகிப்பாளரின் விருப்பு வெறுப்புக்கு இணங்குவதாகும்

2) வர்த்தக விளம்பரங்களின் தேவைக்கு இணங்குவதாகும்

3) உரிமையாளரின் தேவைக்கும் தேவையற்ற நிலைக்கும் இணங்குவதாகும்

4) அரச சட்டத்திட்டங்களின் வழிகாட்டலுக்கு இணங்குவதாகும்

5) சிறுவர், பெண்களின் விருப்பு வெறுப்புக்கு இணங்குவதாகும்

41. வகுப்பறை ஒன்றில் விழிப்புணர்வு மிக்க பெறுநரின் பண்புகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பட்ட வேளை பல்வேறு மாணவர்கள் கூறிய கருத்துக்கள் வருமாறு

மீனா - ஊடகங்களால் மறைக்க முற்படும் விடயங்களை விளங்கிக் கொள்ளல்.

கரன் - ஊடகம் தொடர்பான விமர்சன கருத்துக்களை முன்வைக்கும் ஆற்றல்

சுமன் - ஊடகங்கள் முன்வைப்பவற்றில் பயனுள்ள விடயங்களை தெரிவு செய்து உள்வாங்கும் ஆற்றல்

இவற்றில் சரியான கருத்தினை முன்வைத்தோர்?

1) கரன், மீனா 2) சுமன், மீனா 3) கரன் 4) மீனா 5) கரன், மீனா, சுமன்

42. ஒரு வகுப்பறை யொன்றில் ஐந்து மாணவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கேற்பச் செய்தி எனப்படுவது.

A – பொறித்தொகுதிகளை மாத்திரம் கொண்டு முடிக்கப்படும்

B – அந்தரங்கவியல்பு அற்றது

C – ஏகவின வாங்கிக் கூட்டத்திற்கு வழிப்படுத்தப்படும்

D – கூட்டு முயற்சியின் விளைவாகும்

E – பெரும்பாலும் இலாபத்தை நோக்கமாக கொண்டது

மேற்குறித்த கூற்றுக்களிடையே

1) A B C D ஆகியன மட்டும் உண்மையானவை

2) A C D E ஆகியன மட்டும் உண்மையானவை

3) A B D E ஆகியன மட்டும் உண்மையானவை

4) B C D E ஆகியன மட்டும் உண்மையானவை

5) A B C D E ஆகியன எல்லாம் உண்மையானவை

43. வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையை மிக நன்றாக ஆராயும் போது அறியப்பட்ட விடயங்களாகப் பின்வரும் தகவல்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன

A – பொதுச்செய்தி மாத்திரம் விநியோகிக்கப்படுகின்றது

B – தொழில்நுட்பக் கருவிகளைச் சார்ந்திருத்தல் கட்டாய நிலைமையன்று

C – எப்போதும் பரந்திருக்கும் வாங்கிக் கூட்டத்தை இலக்காகக் கொண்டது

D – தொடர்பாடல் நிலையம் முறைமையான ஒழுங்கான தாபனக் கோலத்தைக் காட்டுவதில்லை

E – வாயிற்காப்பாளர்கள் பலர் இருத்தல் சாதாரண நிலமையாகும்

மேற்குறித்த தகவல்களிடையே

1) A, B, C ஆகியன மாத்திரம் உண்மையாக இருக்கும் அதேவேளை D, E ஆகியன பொய்யாகும்.
2) A, C, E ஆகியன மாத்திரம் உண்மையாக இருக்கும் அதேவேளை B, D ஆகியன பொய்யாகும்.
3) B, C, E ஆகியன மாத்திரம் உண்மையாக இருக்கும் அதேவேளை A, D ஆகியன பொய்யாகும்.
4) A, B, C, D, E ஆகியன எல்லாம் உண்மையானவையாகும்.
5) C, D, E ஆகியன மாத்திரம் உண்மையாக இருக்கும் அதேவேளை A, B ஆகியன பொய்யாகும்.

44. முறைசார் தகவல் தொடர்பு நிலையங்களில் குறுக்குத் தொடர்பாடல் வழிமுறையும் உள்ளடங்குகின்றது. பின்வருவனவற்றுள் இதற்கு எடுத்துக் காட்டான சந்தர்ப்பமாக அமைவது?

1) நிறுவன முகாமையாளர் சுற்று நிரூபம் ஊடாக ஊழியர்களுக்கு செய்தியையும், அறிவுறுத்தல்களையும் பரிமாற்றல்.
2) நிறுவனம் ஒன்றின் பொதுசனத் தொடர்பு அதிகாரியிடம் ஊழியர்கள், மற்றும் மக்கள் தமது அபிப்பிராயங்கள் விசாரனைகளை முன்வைத்தல்.
3) நிறுவன முகாமையாளர் ஊழியரின் பிரச்சினைகளை தனிப்பட்ட ரீதியில் உரையாடல் ஊடாக அறிதல்.
4) நிறுவனம் ஒன்றின் நிர்வாகப்பிரிவு, செயற்றிட்டப்பிரிவு, கொடுக்கல் வாங்கல்பிரிவு ஆகியவற்றின் பணிப்பாளர்கள் செய்திகளை பரிமாற்றுதல்.
5) நிறுவனத்தில் கீழ்மட்ட ஊழியர்கள் முகாமையாளருடனான கலந்துரையாடலின் போது தமது கருத்தினை முன்வைத்தலில் ஈடுபடுதல்.

45. தன்னகத் தொடர்பாடல் (Intrapersonal Communication) இயல்பை பிரதிபலிக்காது.

1) உடல், உள்ளம் சார்ந்த உணர்ச்சிகளும், புலனுணர்வும் இத் தொடர்பில் பெரும் பங்கு வகிக்கின்றன.
2) உட்புற, வெளிப்புற கிளர்ச்சிகளுக்கு துலங்கல் வெளிப்படுதல்
3) தன்னகத் தொடர்பாடலில் இடையூறுகள் ஏற்படுகின்றன.
4) நடுநரம்பு மண்டலம், புறப்பரப்பு நரம்பு மண்டலம், தகவல் அனுப்புதல் பெறுதலில் ஈடுபடுதல்.
5) உட்புற, வெளிப்புற கிளர்ச்சிகள் இத் தொடர்பாடலில் முதன்மை பெறுவதில்லை.

46. பின்வருவனவற்றுள் அறிவுச்சமூக இயல்பை பிரதிபலிக்காதது

1) விஞ்ஞான, சமூக அறிவியல் சார்ந்த அறிவுக்கு மதிப்பளித்தல்
2) விஞ்ஞான, சமூக அறிவியல் விடயங்களை விருத்தி செய்வதைக் கட்டுப்படுத்தல்.
3) விஞ்ஞான, சமூக அறிவியல் சார்ந்த விடயங்களை உள்வாங்குதல்.
4) உள்வாங்கிய விஞ்ஞான சமூக அறிவியல் விடயங்களை பரப்புவதில் ஈடுபடுதல்.
5) பல்வேறு தேவைகளின் பொருட்டு புதிய அறிவை உருவாக்குதல்

47. அபிவிருத்தி தொடர்பாடல் வழிமுறைகள் பின்வருமாறு

A – பங்குபற்றுல் தீர்மானம் B – கருத்துருவாக்க தலைவர்

C – குழுக்களை கட்டியெழுப்பல் D – கைராட்டினம் D – கீழிருந்து மேல் தொடர்பு

இவற்றுள் நாயர் - வைட் பரிமாற்ற மாதிரியில் உள்ளடக்கப்பட்டவை எவை?

1) A, C மற்றும் D 2) A, C மற்றும் E 3) A, E மற்றும் C

4) B, D மற்றும் E 5) C, D மற்றும் E

48. ஒரு ஊடக வெளியீட்டை தயார் செய்யும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சங்கள்

A – அவசியமான தகவல்களை கவனமாகத் தெரிவு செய்தல்

B – அனைத்து ஊடகங்களிற்கும் ஏற்றவகையில் அதனை தெரிதல்

C – குறித்த இலக்கிற்கு அமைய அமைத்துக் கொள்ளல்

D – அதிகார பூர்வ கையெழுத்து இடுதல்

மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை

1) A, B ஆகியன மாத்திரம் 2) B, C ஆகியன மாத்திரம் 3) C, D ஆகியன மாத்திரம்

4) A, C, D ஆகியன மாத்திரம் 5) A, B, C, D ஆகிய எல்லாம்

49. அண்மைய அனுபவங்களின் படி உலகில் உள்ள ஒவவொரு நாடுமே இயற்கை அழிவுகள் பற்றி விசேட கவனஞ்செலுத்தி வருகின்றன இதற்கு அவசியமான நடவடிக்கையாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது.

1) காலநிலை ஆய்வு நிறுவனங்களை நவீனமயப்படுத்துவது
2) நிலச்சரிவு ஆபத்துள்ள இடங்களில் இருந்து மக்களை வெளியேற்றுவது
3) அனர்த்த தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பை உருவாக்குவது
4) ஆறுகல், நீரோடைகள் மற்றும் அருவிகள் ஆகியவற்றிலுள்ள நீரைச் சரியாக முகாமைத்துவம் செய்தல்.
5) வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் இதற்கென ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கீடு செய்தல்.

50. பாடசாலை கற்றலில் பத்திரிகை ஊடகத்தை பயன்படுத்துதல் எனும் தொடர்பாடல் செயற்றிட்டத்தில் அறிக்கை ஒன்றினை தயாரிக்குமாறு தங்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் உள்ளடக்கத் தேவையற்றது எது?

1) ஆராய்ச்சி முறையின் பயன்பாடு
2) பயன்படுத்திய மாதிரியெடுத்தல் முறை
3) ஆலோசனைகளும் முடிவுகளும்
4) அபிவிருத்தி திட்டங்களின் பாகுபாடு
5) பயன்படுத்திய பௌதீக மனித வளங்கள்.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | தொடர்பாடலும் ஊடககற்கையும் II | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி II

**அறிவுறுத்தல் :-**

- **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.**

**01. உயிர் வாழ்விற்கு தொடர்பாடல் அவசியமான ஓர் அம்சமாகும்.**

1) வில்பர் ஷ்ராம் இன் தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணத்தை தருக.
2) தொடர்பாடலின் அடிப்படைப் பணிகள் நான்கினை சுருக்கமாக விவரிக்குக.
3) தொடர்பாடலின் எண்ணக்கருக்களில் ஆட்சியதிகாரத் தன்மையினை அடிப்படையாக கொண்ட கோட்பாட்டினை விளக்குக?
4) வெகுசனத் தொடர்பாடல் செயலொழுங்கில் வாயிற்காப்பாளர்களின் பணி பங்கு முக்கியமானது ஊடகச் செயலொழுங்கில் நான்கு வாயிற்காப்பாளர்களினை குறிப்பிட்டு அவர்களின் பணிபங்கினை விளக்குக?

**02. 'மொழி தொடர்பாடல் ஊடகம் ஆகும்'**

1) மொழி பயன்படும் விதங்களினை குறிப்பிடுக.
2) அச்சு ஊடகங்களில் மொழியினை பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ளக்கூடிய நான்கு அம்சங்களை குறிப்பிடுக.
3) முறைசாரத் தொடர்பாடலின் இயல்புகளை குறிப்பிட்டு வகைப்பாடுகளினை விளக்குக?
4) பிரசை இதழியல் என்பது எதுவென வரையறுத்து அதன் நான்கு இயல்புகளினை குறிப்பிட்டு விளக்குக.

**03. "பாடறிந்து ஒழுகுதல் பண்பாடு எனலாம்"**

1) சுய எண்ணக்கரு தொடர்பாக ரொஜர்ஸினால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணத்தினை குறிப்பிடுக?
2) வாய் மொழியல்லாத் தொடர்பாடலின் பணிகள் எவை?
3) பண்பாட்டு பரிமாற்றம், பண்பாட்டு அதிர்வு ஆகிய விடயங்களினை விளக்குக?
4) "ஊடக விளம்பரங்களும் சமூக தாக்கங்களும்" எனும் கருத்தியலில் பத்திரிகை ஊடகம் ஒன்றிற்கு கட்டுரை எழுதுக?

**04. உங்கள் நண்பன் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**

1) மக்கள் பங்குபற்றலுக்கான அபிவிருத்தி செயற்திட்டங்களினை அமுல்படுத்தும் நிறுவனங்கள் சில தருக?

2) அபிவிருத்தி பற்றிய விளக்கமளிப்பில் பேராசிரியர் விமல் திசநாயக்காவினால் முன்வைக்கப்பட்ட பாரம்பரிய நவீன வரைவிலக்கணங்களினை விளக்குக?

3) அபிவிருத்தி தொடர்பாடல் அனுபவங்களில் சீனமாதிரி, இருபடி முறை மாதிரிகளினை குறிப்பிட்டு அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளினை விளக்குக?

4) அபிவிருத்தி தொடர்பாடல் பற்றிய இலங்கை அனுபவங்களினை வரலாற்று ரீதியாக ஆராய்க?

**05. "சமூகமயமாக்கல் உலகமயமாக்கலிற்கு அடிப்படை"**

1) பொதுமக்கள் தொடர்பு விளம்பரங்களில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

2) 'சமூகமயமாக்கல்' தனிமனிதனை சமூகத்துடன் இணைக்கின்றது. சமூகமயமாக்கல் எண்ணக்கருவினை விளக்குக?

3) பொதுமக்கள் தொடர்பு முறைகள் வடிவங்களினை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றுபற்றிச் சுருக்கமாக விளக்குக?

4) ஊடகக் கலந்துரையாடல் என்பதனை வரையறுத்து ஒழுங்குபடுத்தும் போது கவனத்தில் கொள்ளும் விடயங்களை நான்கு அம்சங்களின் அடிப்படையில் விளக்குக.

**06. "செய்தி அல்லது தகவல் பரிமாற்றம் தொடர்பாடல்"**

1) அபிவிருத்தி தொடர்பு செயல்திட்டத்திற்கு தரவு சேகரிக்கும் முறைகள் / கருவிகள் இரண்டு தருக?

2) வட்டச்சுற்றுப் பாய்ச்சல் மாதிரி நேர்கோட்டு மாதிரிகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

3) வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கில் பயன்படுத்தும் ஊடக உபகரண பாவனைகளினை வகைப்படுத்தி விளக்குக?

4) குழு ரீதியிலான தொடர்பு செயலொழுங்கிற்கும் வெகுசனத் தொடர்பாடல் செயலொழுங்கிற்கு மிடையிலான வேறுபாடுகளினை குறிப்பிட்டு விளக்குக?

**07. "பாடசாலை ஊடக பண்பாட்டிற்கு ஊடக கழகங்கள் அவசியம்"**

1) ஊடகப் பண்பாட்டின் நான்கு இயல்புகளினை குறிப்பிடுக?

2) பாடசாலை ஊடகக்கழகத்திற்கு நியமிக்கப்படக்கூடிய நான்கு உள்ளக மற்றும் வெளியக நபர்களினை குறிப்பிடுக?

3) தற்போதய ஊடகச்செயலொழுங்கில் தணிக்கையின் செயற்பாடு தொடர்பில் நான்கு வழிமுறைகளினை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

4) ஒரு செய்தியைப் படைப்பாக்க வழியில் அளிப்பதற்கான உபாயங்களைத் தீர்மானிப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டிய நான்கு அம்சங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக?